முதல் உலகப்போர் 1914-ம் ஆண்டு முதல் 1918-ம் ஆண்டு வரை நடைபெற்றது. விமானங்களும், போர்க் கப்பல்களும், நீர்மூழ்கிக் கப்பல்களும் முதன் முதலாக இந்தப் போரில்தான் பயன்படுத்தப்பட்டன. மொத்தம் 1,561 நாட்கள் நடைபெற்ற இந்தப் போரில் 2 கோடி பேர் இறந்தனர்.

ஆஸ்திரியா நாட்டுப் பட்டத்து இளவரசரும், அவரது மனைவியும் காரில் சென்றபோது சுட்டுக் கொல்லப்பட்டனர். செர்பியா நாட்டைச் சேர்ந்த ஒருவர் சுட்டுக்கொன்றதன் காரணமாக, அந்நாட்டின் மீது ஆஸ்திரியா படையெடுத்தது. இச்சம்பவமே முதல் உலகப் போர் தொடங்குவதற்கு மூலகாரணம்.

சித்திரை திருவிழாவுக்குக்கூட சுத்தப்படுத்தப்படாத வைகை ஆறு

சீமைக்கருவேல மரங்கள் அடர்ந்துள்ளதால் நேர்த்திக்கடன் செலுத்தும் பக்தர்கள் அதிருப்தி

ஒய்.ஆண்டனி செல்வராஜ்

கள்ளழகர் எழுந்தருளும் இடத்தில் ஆகாயதாமரைச் செடிகள் நிறைந்து காணப்படுகின்றன. (வலது) ஆழ்வார்புரம் பகுதி வைகை ஆற்றில் அடர்ந்து வளர்ந்துள்ள சீமைக்கருவேல மரங்கள். படங்கள்: நா.தங்கரத்தினம்

மதுரை

சித்திரைத் திருவிழாவுக்குக்கூட வைகை ஆற்றை சுத்தப்படுத்தி பராமரிக்க இந்து சமய அறநிலையத்துறையும், பொதுப்பணித்துறையும் நடவடிக்கை எடுக்காததால், சீமைக்கருவேல மரங்களும், ஆகாயத்தாமரைகளும் நிறைந்துள்ளன. இதனால் ஆற்றில் நேர்த்திக்கடன் செலுத்தும் பக்தர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

சித்திரைத் திருவிழாவில் கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் நிகழ்வின்போது தென்மாவட்டங்களைச் சேர்ந்த லட்சக்கணக்கான பக்தர்கள் ஆற்றின் இருகரைகளிலும் நீண்டதூரம் திரண்டு தரிசனம் செய்வது வழக்கம். இதற்காக விழாவுக்கு முன் மாவட்ட நிர்வாகத்தின் அறிவுறுத்தலின் பேரில் வைகை ஆறு சுத்தம் செய்யப்படும். வைகை அணையில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீர் ஆங்காங்கே தேங்காமல் சீராக உருண்டோடும் வகையிலும், ஆற்றில் படர்ந்த ஆகாயத்தாமரைகள், சீமைக்கருவேல மரங்கள் அகற்றப்படும்.

ஆனால் இம்முறை மதுரை ஆழ்வார்புரம் வைகை ஆற்றில் கள்ளழகர் எழுந்தருளும் இடத்தில் மட்டுமே பொதுப்பணித்துறை, ஆகாயத்தாமரைச் செடிகளையும், மேடுபள்ளங்களையும் சரிசெய்துள்ளது. மேலும், யானைக்கல் தரைப்பாலம் அருகே உள்ள தடுப்பணைப் பகுதியில் உள்ள ஆகாயத்தாமரைகளை அகற்றினர். ஆனால் ஓபுளாபடித்துறை பாலம் அருகில் உள்ள ஆகாயத்தாமரைச் செடிகள் அகற்றப்படாமலேயே உள்ளன. ஆழ்வார்புரம் பகுதி ஆற்றில் சீமைக்கருவேல முட்புதர்கள் அடர்ந்த காப்புக்காடு போல் காணப்படுகிறது. இதனால் கள்ளழகரை காண வரும் மற்றும் நேர்த்திக்கடன் செலுத்த வரும் பக்தர்கள் காயமடைய வாய்ப்புள்ளது. பொதுப்பணித்துறையினரின் இந்த பொறுப்பற்ற பணி பக்தர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து பக்தர்கள் கூறுகையில், கள்ளழகர் எழுந்தருளும் மற்றும் விஜபிக்கள் வந்து செல்லும் பகுதியில் மட்டும் சீரமைப்பு பணிகள் நடந்துள்ளன. ஆனால் அங்கிருந்து கள்ளழகர் செல்லும் மதிச்சியம் முதல் குருவிக்காரன் சாலை பாலம் வரையிலான ஆற்றுப்பகுதியில் சீமைக்கருவேல மரங்கள் அடர்ந்து வளர்ந்துள்ளன. கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் நிகழ்வைக் காண மதுரை மற்றும் அண்டை மாவட்டங்களில் இருந்து லட்சக்கணக்கான பக்தர்கள் வைகை ஆற்றில் திரள்வர். இதில் பலர் வேண்டுதல் நிறைவேற்றும் வகையில் கள்ளழகர், கருப்பணசாமி வேடமிட்டும், மொட்டையடித்தும் நேர்த்திக்கடன் நிறைவேற்றுவர். அவர்கள் அனைவருமே வைகை ஆற்றில் திரண்டு கள்ளழகரை தரிசனம் செய்வதும் வழக்கம்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய இந்து சமய அறநிலையத்துறையினர், பொதுப்பணித் துறையினர் இப்பணியை சரியாக செய்யவில்லை. வரும் ஆண்டிலாவது மாவட்ட நிர்வாகம் விழிப்போடு செயல்பட வேண்டும். மேலும், வைகை ஆற்றில் நிரந்தரமாகவே சீமைக்கருவேல மரங்களை அகற்றி நீர்வழித்தடங்களை பாதுகாக்க மாவட்ட நிர்வாகம் முன்வர வேண்டும், என்றனர்.

மதுரை மாவட்ட 10 தொகுதிகளுக்கான

5 வாக்கு எண்ணும் மையங்களில் 1,300 அலுவலர்கள்

மதுரை

மதுரை மாவட்டத்தில் உள்ள 10 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான 5 வாக்கு எண்ணும் மையங்களில் மொத்தம் 1,300 அலுவலர்கள் பணியாற்றவுள்ளனர்.

நடைபெற்று முடிந்த தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை மே 4-ம் தேதி நடைபெறுகிறது. அதன்படி, மதுரை மாவட்டத்தில் உள்ள 10 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் 5 மையங்களில் வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது. மொத்தம் 3,079 வாக்குச்சாவடிகளில் பதிவான வாக்குகளில் மேலூர் தொகுதிக்கு 21 சுற்றுகள், கிழக்கு 29, சோழவந்தான் 19, வடக்கு 19, தெற்கு 17, மத்தி 19, மேற்கு 24, திருப்பரங்குன்றம் 26, திருமங்கலம் 26, உசிலம்பட்டி 25 சுற்றுகளாக வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

வாக்கு எண்ணும் மையங்களில் தலா ஒரு தொகுதிக்கு நுண் பார்வையாளர்கள் 17 பேர், கண்காணிப்பாளர்கள் 17 பேர், உதவியாளர்கள் 17 பேர், கூடுதல் அலுவலர்கள் உட்பட மொத்தம் 130 அலுவலர்கள் என 10 தொகுதிகளுக்கும் சேர்த்து மொத்தம் 1,300 அலுவலர்கள் பணியில் ஈடுபட உள்ளனர்.

திண்டுக்கல் மாநகராட்சியில் குடிநீர் விநியோகம் பாதிப்பு

திண்டுக்கல்

திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் செந்தில்முருகன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், திண்டுக்கல் மாநகராட்சியின் குடிநீர் ஆதாரங்களான ஆத்தூர் நீர்த்தேக்கத்தில் போதிய நீர் இல்லாததாலும், காவிரி கூட்டுக் குடிநீர் திட்ட குழாய் உடைப்பு காரணமாகவும் மாநகராட்சி பகுதி குடிநீர் விநியோகத்தில் காலதாமதம் ஏற்படும் சூழல் உள்ளது. எனவே, குடிநீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என தெரிவித்துள்ளார்.

மதுரையில் சுட்டெரித்த வெயிலிலும் திரண்ட பக்தர்கள்

சித்திரை திருவிழாவால் களைகட்டிய கோயில் மாநகரம்

மதுரை

சித்திரைத் திருவிழாவை முன்னிட்டு சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாமல் மதுரையில் கள்ளழகரை தரிசிக்க பக்தர்கள் பல்லாயிரக்கணக்கில் திரண்டனர்.

மதுரை என்றாலே மீனாட்சி அம்மன் கோயிலும், சித்திரைத் திருவிழாவும்தான் அனைவருக்கும் நினைவுக்கு வரும். ஆண்டு முழுவதும் மதுரையில் திருவிழாக்கள் கொண்டாடப்பட்டாலும், சித்திரைத் திருவிழாவில் மக்களின் ஆட்டமும், பாட்டமும் மெய்சிலிர்க்க வைக்கும்.

தூங்கா நகரம் எனப் பெயரெடுத்த மதுரையில், சித்திரைத் திருவிழா நாட்களில் மட்டும் உழைப்புக்கும், பரபரப்பான போக்குவரத்துக்கும் ஓய்வு கொடுக்கப்படும். கள்ளழகரின் எதிர்சேவையிலும், வைகை ஆற்றில் எழுந்தருளி மலைக்குத் திரும்பிச் செல்லும்போதும் சாலைகளில் போக்குவரத்து நிறுத்தப்படும். மண்டகப்படிகளில் எழுந்தருளும் கள்ளழகரைப் பார்த்து தரிசனம் செய்த பின்னரே பக்தர்கள் வீடுகளுக்குத் திரும்புவார்கள்.

இந்த ஆண்டு சித்திரைத் திருவிழா நாட்களில் மதுரை மாநகரில் வழக்கத்துக்கு மாறாக வெயில் கடுமையாகச் சுட்டெரிக்கிறது. ஆனாலும், பக்தர்கள் வெயிலையும் பொருட்படுத்தாமல் குழந்தைகளுடன் திரண்டு வருகின்றனர். நேற்று காலை மதுரை மாநகரை வந்தடைந்த கள்ளழகரை பார்க்க நத்தம், அழகர்கோவில் சாலைகளில் ஆயிரக்கணக்கில் கொளுத்தும் வெயிலுக்கு மத்தியில் பக்தர்கள் திரண்டனர். வெயிலில் வதங்கினாலும் சோர்வடையாமல் உற்சாகத்துடன் கள்ளழகரை பார்க்க பக்தர்கள் திரண்டனர்.

அதேநேரம் வழிநெடுக அழகர் வரும் சாலைகளில் தன்னார்வ அமைப்பினர், தனியார் நிறுவனத்தினர், மண்டகப்படிதாரர்கள் அன்னதானம், கரும்புச்சாறு, தண்ணீர் பழம், மோர் உள்ளிட்ட பல்வேறு வகை குளிர்பானங்கள், உணவுகளை வழங்கினர்.

அதனால், கள்ளழகரைப் பார்க்கவும், திருவிழாவில் வழங்கப்படும் விதவிதமான உணவுகள், குளிர்பானங்களைப் சாப்பிடவும் இளைஞர்கள், குழந்தைகள் பட்டாளம் படையெடுக்கும். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் கொண்டாட வைக்கும் சித்திரைத் திருவிழா, தற்போது சுட்டெரிக்கும் வெயிலைப் பின்னுக்குத் தள்ளி திரும்பிய பக்கமெல்லாம் மதுரையை பக்தர்கள் வெள்ளத்தில் மிதக்க வைத்துள்ளது.

பழநியில் கனமழை 25 பேர் காயம்

பழநி

பழநியில் நேற்று மாலை 5.30 மணியளவில் பலத்த இடி மின்னலுடன் கனமழை பெய்தது. சில இடங்களில் ஆலங்கட்டி மழையும் பெய்தது. பலத்த சூறைக்காற்றுக்கு மரம் சாய்ந்து விழுந்ததில் ஒரு ஆட்டோ, 4 பைக்குகள் சேதமடைந்தன. இடும்பன்குளம் அருகே மழைக்கு ஒதுங்கி நின்றவர்கள் மீது தகரத்தாலான மேற்கூரை சரிந்து விழுந்ததில் தஞ்சாவூரைச் சேர்ந்த 25 பக்தர்கள் காயமடைந்தனர். இதேபோல், கொடைக்கானல் பகுதியிலும் நேற்று மாலை திடீரென பலத்த மழை பெய்தது.

பூட்டை உடைத்து நகை திருட்டு

போடி

தேனி மாவட்டம் போடி அருகே சில்லமரத்துப்பட்டி ஆர்.எஸ்.டவுன்ஷிப் வளாகத்தைச் சேர்ந்தவர் தனபிரசாத் (36). இவர் சென்னையில் குடியிருந்து ஐ.டி. நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார். தனபிரசாத்தின் தாயார் ஜெயந்தி நேற்று முன்தினம் பழநிக்குச் சென்றிருந்தார். அப்போது இவரது வீட்டின் பூட்டை உடைத்து பீரோவில் இருந்த கம்மல், ஆரம், ஜிமிக்கி, தங்க நாணயங்கள், இரண்டரை கிலோ வெள்ளிப் பொருட்கள், ரொக்க பணம் ரூ.3 லட்சத்து 6 ஆயிரத்தை மர்ம நபர்கள் திருடிச் சென்றனர். மொத்த மதிப்பு ரூ.11.66 லட்சம் ஆகும். இதுகுறித்து போடி போலீஸார் விசாரிக்கின்றனர்.

நகரில் நடப்பவை

மதுரை

- சித்திரைத் திருவிழா 5-ம் நாள்: கள்ளழகர் கோயில், தங்கக் குதிரை வாகனத்தில் வைகை ஆற்றில் எழுந்தருளல், ஆழ்வார்புரம், அதிகாலை 5.30, ராமராயர் மண்டபம், பிற்பகல் 12. வண்டியூர் வீரராகவப் பெருமாள் கோயில், இரவு 9.
- பெருவிழா திருப்பலி 8-ம் நாள் முதல் விருந்து புனித வளனார் ஆலயம், ஞானஒளிவுபுரம், காலை 6, கொடியிறக்கம், மாலை 6.
- ஆன்மிக இலக்கியப் பொழிவு: மதுரைத் திருவள்ளுவர் மன்றம், தலைப்பு- திருக்குறள், பேசுபவர்-ப.சந்தானம், வடக்காடி வீதி, இரவு 7.
- பண்பாட்டு இலக்கியப் பொழிவு: திருவள்ளுவர் மன்றம், தலைப்பு-திருமந்திரம், பேசுபவர் - திருமாவளவன், சக்தி வேலம்மாள் நகர், மாலை 5.

பழநி

- சித்திரை திருவிழா 10-ம் நாள்: பழநி லட்சுமி நாராயணப் பெருமாள் கோயில், சுவாமி புறப்பாடு, இரவு 7, கொடியிறக்கம், இரவு 8.
- சித்ரா பவுர்ணமி விழா: பழநி பெரியநாயகியம்மன் கோயில், 108 பால்குட ஊர்வலம், காலை 8, சுவாமி - அம்பாள் வெள்ளித்தேரில் வீதியுலா, இரவு 8.

Canara Bank केनरा बैंक | सिंडिकेट Syndicate

Circle Office, St. Mary's Campus, East Veli Street, Madurai - 625 001. Phone : 0452 - 2333355

Public Notice-Invitation of Applications For Empanelment of Stock Auditor / Fixed Asset Valuer

CANARA BANK, Circle Office, Madurai invites applications for Empanelment of Stock Auditor/Fixed asset valuer (fresh) for branches under Madurai circle for a period of five years, subject to fulfillment of the criteria related to educational qualifications and experience, mentioned in the Annexure. Applications are to be submitted along with the copies of KYC, educational qualification and experience proofs to the nearest Regional Office Only (No copy to be sent directly to the Circle Office). List of Regional offices along with their addresses and contact details is available in Bank's Website.

Last date for receipt of application for this communication is 10-05-2026

The Application format and annexures can be downloaded from Bank's corporate website **https://www.canarabank.bank.in/empanelment-application-and-guidelines-for-third-party-entities.** The empanelment as Auditor/Valuer will be done at the sole discretion of the Bank and the Bank reserves its right of rejecting any of / all the applications, without assigning any reason thereof.

For any clarification, the applicant may contact the **Canara Bank, Circle Office, Madurai, (Ph:7200225339, Email: bscomdu@canarabank.com)** or any nearest regional Office / Branches under Canara Bank, Circle Office, Madurai.

Place : Madurai sd/-
Date : 30.04.2026 **Assistant General Manager**

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்புநடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

வ. எண்	கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
கிளை அலுவலகம்: எண்.1,1/109, தென்கரை, கம்பம் ரோடு, பெரியகுளம், தேனி, தமிழ்நாடு-625601					
1.	1602210170000048 / 1.Mr.பகவதி A 2. Mrs.செம்பாயி	(I) 30.07.2022 & 26.07.2022 அன்றுள்ளபடி ₹ 4,85,045/- (ரூபாய் நான்கு லட்சத்து எண்பத்தைந்தாயிரத்து நாற்பத்தைந்து மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 17.11.2022 & நேரடி சுவாதீனம் - 10.10.2024	10.04.2026 அன்றுள்ளபடி ₹ 6,85,826/- (ரூபாய் ஆறு லட்சத்து எண்பத்தைந்தாயிரத்த எண்ணூற்று இருபத்தாறு மட்டும்)	₹ 11,79,000/- (ரூபாய் பதினொன்று லட்சத்து எழுபத்து ஒன்பதாயிரம் மட்டும்)	₹ 1,17,900/- (ரூபாய் ஒரு லட்சத்து பதினோழாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்)
சொத்து விவரம்: பெரியகுளம் பதிவு மாவட்டம், ஆண்டிப்பட்டி சார் பதிவாளர் அலுவலகம் எல்லைக்குட்பட்ட சர்வே எண்.578/1A, **சண்முகசுந்தரபுரம் கிராமம், ஆண்டிப்பட்டி தாலுகா, தேனி மாவட்டம்** என்னும் முகவரியில் **0-96.00 ஏக்கர் 37 சென்ட் இதில் கிழக்கு பக்கத்தில் 0-41 சென்ட் இதில் கிழக்கு முடிவில் 0-18 சென்ட் இதில் வடக்கு பக்கத்தில் கிழக்கு பகுதியில் 0-03 சென்ட் அதாவது 1308 சதுர அடி அதாவது 121.52 சதுர மீட்டர் சொத்து,** அதனுடன் அனைத்து இதர வழக்கமான உரிமைகள், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: மேற்கு: 10 அடி அகல வடக்கு தெற்கு பொது வழிப்பாதை தெரு, தெற்கு: அம்மாவாசிக்கு சொந்தமான சொத்து, வடக்கு: கண்ணையா, பெருமாள் வீடு, கிழக்கு: அம்மாவாசிக்கு சொந்தமான சொத்து.					
கிளை அலுவலகம்: கதவு எண்.24, புது அக்ரஹாரம், பழனி ரோடு, JCB மருத்துவமனை அருகில், நேருஜி நகர், திண்டுக்கல், தமிழ்நாடு-624001					
2.	1607350250000019 / 1.Mr.சங்கர் 2.Mrs.முத்துலட்சுமி	(I) 30.07.2025 & 29.07.2025 அன்றுள்ளபடி ₹ 4,89,946/- (ரூபாய் நான்கு லட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தாறு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 08.12.2025 & நேரடி சுவாதீனம் - 03.03.2026	10.04.2026 அன்றுள்ளபடி ₹ 5,65,580/- (ரூபாய் ஐந்து லட்சத்து அறுபத்து ஐந்தாயிரத்து ஐநூற்று எண்பது மட்டும்)	₹ 4,64,000/- (ரூபாய் நான்கு லட்சத்து அறுபத்து நான்காயிரம் மட்டும்)	₹ 46,400/- (ரூபாய் நாற்பத்து ஆறாயிரத்து நானூறு மட்டும்)
சொத்து விவரம்: திண்டுக்கல் பதிவு மாவட்டம், செந்துரை சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட சர்வே எண்.294/4B, **கதவு எண்.5/124, சேத்தூர் கிராமம்** என்னும் முகவரியில் **2 ½ சென்ட் (272 சதுர அடி) நிலம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: முத்தையா வீடு, தெற்கு: பழனியாண்டி வீடு, கிழக்கு: முத்து சிதம்பரம் மற்றும் இதர புஞ்சை, மேற்கு: வழிப்பாதை.					

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 10.06.2026 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி: **09.06.2026** அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம் **08.06.2026** காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி : **Mr.ராம்பிரசாத் - 95009 96689 / Mr.டிஜோ சாஜன் – 78451 92961.**

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Mr.**பிரபாகரன் **Mob.74182 81709**) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**

விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம். i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

தேதி: 01.05.2026 **ஒப்பம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்**

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

NAME CHANGE

I, SIVA PRASATH, S/o. RAMESH P born on 8th March 2004 (Native District: Virudhunagar) residing at D.No.5/226, Mahatma Gandhi Nagar, Saminatham, Injar, Sivakasi Taluk, Virudhunagar District, Tamilnadu, India shall henceforth be known as **SIVA PRASATH R** Aadhaar No.7755 9495 9815

SIVA PRASATH

பொது

பொது அறிவிப்பு

மாண்புமிகு கடன் வசூல் தீர்ப்பாயம், மதுரை. O.A. No. 65 of 2026

கனரா வங்கி, எட்டையபுரம் கிளை, 72/9, தெப்பக்குளம் தெரு, எட்டையபுரம், தூத்துக்குடி–628902. அதற்காக அதன் முதன்மை மேலாளர். **..வாதி..** –எதிராக– **1. M/s.விளாத்திகுளம் புதூர் பல்செஸ் புரொடியூசர் கம்பெனி லிமிடெட்,** அதற்காக அதன் இயக்குநர்கள், எண்.31/9, பெருமாள் தேவர் காம்ப்ளக்ஸ், கடல்குடி ரோடு, வ.புதூர், தூத்துக்குடி–628905. **8. திருமதி.சுதாராணி,** க/பெ.முருகன், எண்.1, கண்ணப்பா நகர், புதூர், விளாத்திகுளம், தூத்துக்குடி–628905. **10. B.பவித்ரா பாலசுப்ரமணி,** (M/s.விளாத்திகுளம் புதூர் பல்செஸ் புரொடியூசர் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி), த/பெ.பாலசுப்ரமணி, எண்.2A, சங்கையா கோவில் தெரு, பழைய குயவர்பாளையம், மதுரை தெற்கு, மதுரை–625009. **..1,8 & 10–வது பிரதிவாதிகள்.. 1,8 & 10–வது பிரதிவாதிகளுக்கு பத்திரிக்கை விளம்பரம்.**

மேற்படி வழக்கில் வாதி வங்கி தங்களுக்கு எதிராக ரூ.63,22,739.03–ஐ வசூல் செய்ய தாவா எண்.**O.A. No. 65 / 2026** என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளது.

மேற்படி வழக்கில் தாங்கள் ஆஜராவதற்காக வரும் **06.05.2026** அன்று காலை **10.30 மணிக்கு** சமூகம் கோர்ட்டில் வாய்தா போடப்பட்டுள்ளது. அன்றைய தினம் தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டியது. தவறினால் தங்களுக்கு எதிராக வழக்கு தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

D.தனபால், வாதி வழக்கறிஞர்.

SASVITHA HOME FINANCE — **சாஸ்விதா ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்**

சத்குரு காம்ப்ளெக்ஸ், முதல் தளம், எண்.640, அண்ணா சாலை, நந்தனம், சென்னை-600035.

அசையா சொத்துக்கள் சுவாதீன அறிவிப்பு Rule - 8(1)

பிணைக்காப்பு, நிதிச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம் 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள். 2002 ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002)-ன் கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான கீழே கையொப்பமிட்ட **சாஸ்விதா ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்-ன் (இனி நிறுவனம் என்றழைக்கப்படும்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலம்,** மேற்படி சட்டம் 13(2) பிரிவின் விதி 3-ன்படி **25.02.2026 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட T.கல்லுப்பட்டி (தமிழ்நாடு) கிளைக்கு வரவேண்டிய கடன் தொகையான (வீட்டு கடன் கணக்கு எண். 1192031300024) 31.01.2026 அன்றுள்ளபடி** ₹ **6,49,634/-** (ரூபாய் ஆறு லட்சத்து நாற்பத்தொன்பதாயிரத்து அறுநூற்று முப்பத்து நான்கு மட்டும்) மற்றும் 01.02.2026 முதல் அதற்கான வட்டி, இதர செலவுகளுடன் **அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று கடன்தாரர்கள் / சக-கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள்: 1. Mr.ராதா கிருஷ்ணன் P, 2.Mrs.வீரம்மாள் P, 3.Mr.பாண்டியன் R, 4.Mr.ரமேஷ் P, அனைவரது முகவரி:** எண்.1/96, நடுத்தெரு, ரங்கசாமிபட்டி, எருமரப்பட்டி அஞ்சல், உசிலம்பட்டி தாலுகா, மதுரை-625 527, தமிழ்நாடு **ஆகியோருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.**

கடன்தாரர்கள் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்த தவறியதால். குறிப்பாக கடன்தாரர்களுக்கும் / சக-கடன்தாரர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பதென்னவென்றால், மேற்சொன்ன மேற்படி சட்டம் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் 8வது விதியின்படியும் **கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை 29.04.2026 தேதியன்று கீழே கையொப்பமிட்டவர் நிறுவனத்தின் உடைமையாக்கியுள்ளார்.**

இது முதற்கொண்டு கடன்தாரர்களோ/ஜாமீன்தாரர்களோ மற்றும் பொது மக்களோ இந்த சொத்துக்களில் எந்தவிதமான வில்லங்கங்களும் ஏற்படுத்தக்கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் அது **சாஸ்விதா ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்க்கு வந்து சேரவேண்டிய கடன் தொகையான 31.01.2026 அன்றுள்ளபடி** ₹ **6,49,634/-** (ரூபாய் ஆறு லட்சத்து நாற்பத்து ஒன்பதாயிரத்து அறுநூற்று முப்பத்து நான்கு மட்டும்) மற்றும் **01.02.2026 முதல் அதற்கான வட்டிக்கும், இதர செலவுகளுக்கும் கட்டுப்பட்டவை என்றும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.**

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) ஷரத்துக்களின் மீது கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது. (ஈடுபெற்ற சொத்து).

அசையா சொத்துக்கள் விபரம்

ஐட்டம் எண்.1: பெரியகுளம் பதிவு மாவட்டம், உசிலம்பட்டி சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட, S.எண்.127/1, தற்போதைய S.எண்.127/43, வார்டு எண்.2, **கதவு எண்.86 (தற்போதைய கதவு எண்.2/40), ரெங்கசாமிபட்டி கிராமம், எருமரப்பட்டி பஞ்சாயத்து, உசிலம்பட்டி யூனியன், மதுரை மாவட்டம்** என்னும் முகவரியில் உள்ள பரப்பு **382.5 சதுர அடி,** அளவுகள்: கிழக்கு மேற்காக 30 அடி மற்றும் வடக்கு தெற்காக 12¾ அடி, எல்லைகள்: வடக்கு: 2-வது ஐட்டம் சொத்து, கிழக்கு: வடக்கு தெற்கு ரோடு, தெற்கு: கிழக்கு மேற்கு ரோடு, மேற்கு: பெருமாள் நாயக்கர் வீடு மற்றும் பொது மதில்சுவர்

ஐட்டம் எண்.2: பெரியகுளம் பதிவு மாவட்டம், உசிலம்பட்டி சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட, S.எண்.127/1, வார்டு எண்.2, **வீட்டு கதவு எண்.86, (தற்போதைய கதவு எண்.2/40), ரெங்கசாமிபட்டி கிராமம், எருமரப்பட்டி பஞ்சாயத்து, உசிலம்பட்டி யூனியன், மதுரை மாவட்டம்** என்னும் முகவரியில் உள்ள பரப்பு **195 சதுர அடி,** அளவுகள்: கிழக்கு மேற்காக 30 அடி மற்றும் வடக்கு தெற்காக 6½ அடி, எல்லைகள்: வடக்கு: சூர்யநாராயணன் என்கிற உதயகுமார்-க்கு சொந்தமான சொத்து, தெற்கு: 1-வது ஐட்டம், கிழக்கு: வடக்கு தெற்கு ரோடு, மேற்கு: பெருமாள் நாயக்கர் வீடு மற்றும் பொது மதில்சுவர்.

ஐட்டம் எண்.1 மற்றும் 2-ன் மொத்த பரப்பு 0.00.61 ஏர்ஸ் அதாவது 577.5 சதுர அடி.

தேதி: 29.04.2026 **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**
இடம்: சென்னை **சாஸ்விதா ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்**

Canara Bank கனரா வங்கி | Syndicate சிண்டிகேட்

சொத்து மீட்பு மேலாண்மை கிளை-I 524, 8வது தளம், வட்டார அலுவலக கட்டிடம், அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600018 Ph : 044 -28496339

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, கடனீட்டு சொத்துக்கள் (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8(6)/9(1) உடன் கீழ், அசையா சொத்துக்களின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

கனரா வங்கியில் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்துக்களை **கனரா வங்கி, சொத்து மீட்பு மேலாண்மை கிளை I,** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் **அடையாளபூர்வ சுவாதீனத்தில்** எடுக்கப்பட்டு கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்களிடமிருந்து பெற வேண்டிய கடன் தொகையான **31.03.2026 அன்றுள்ளபடி** ₹ **1,19,71,094.54** (ரூபாய் ஒரு கோடியே பத்தொன்பது லட்சத்து எழுபத்து ஒன்றாயிரத்து தொண்ணூற்று நான்கு மற்றும் பைசா ஐம்பத்து நான்கு மட்டும்) மற்றும் வட்டி, இதர செலவுகளை, கனரா வங்கி, சொத்து மீட்பு மேலாண்மை கிளை-I வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் **22.05.2026 அன்று விற்பனை செய்யப்படும்** என இதன் மூலம் பொது மக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்/ஜாமீன்தாரர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

கடன்தாரர்கள்: 1.M/s J S லெதர் எக்ஸ்போர்ட்ஸ், எண்.28/37, முதல் தளம், காட்டூர் சடையப்பன் தெரு, பெரியமேடு, சென்னை-600003 **2.Mr.முகமது முஜ்புர் ரகுமான்.J,** S/o.ஜமால் முகமது R K, 42, பகவதியம்மன் கோயில் தெரு, பிள்ளையார்நத்தம், திண்டுக்கல்-624002 **3.Mr.முகமது ரஃபி.J,** S/o.ஜமால் மொய்தீன், எண்.50 132, பிளிஸ்வில்லா தெரு, கொடைக்கானல், திண்டுக்கல்-624101 **4.Mrs.தாஸ்லிமா.M,** W/o.முகமது முஜிபுர் ரகுமான், எண்.42, பகவதியம்மன் கோயில் தெரு, பிள்ளையார்நத்தம், திண்டுக்கல்-624002 **5.Mr.முகமது ரஃபி.J மற்றும் Mrs.தஸ்லிமா,** எண்.420, பழைய சர்வே எண்.420/29, புதிய சர்வே எண்., வார்டு D, ப்ளாக் 13, T.S.எண்.33/1, காந்திபுரம், கொடைக்கானல்-624002

அசையா சொத்து விவரம்

அடையாளபூர்வ சுவாதீனத்தின் கீழ் உள்ளது.

சொத்தானது Mrs.தாஸ்லிமா & Mr.J.முகமது ரஃபி பெயரில் உள்ளது. திண்டுக்கல் பதிவு மாவட்டம், கொடைக்கானல் சார்-பதிவு மாவட்டம் மற்றும் கொடைக்கானல் நகராட்சி எல்லைக்குட்பட்ட, பழைய சர்வே எண்.420/29 பகுதி, புதிய சர்வே எண். வார்டு D, ப்ளாக் எண்.13, T.S.எண்.33/1 மற்றும் GR பட்டா எண்.1363, கதவு எண்.(37-7) 14/137, 420, காந்திபுரம், கொடைக்கானல் டவுன், கொடைக்கானல் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம் என்னும் முகவரியில் 3 சென்ட் அல்லது 1308 சதுர அடி நிலம் அதிலுள்ள 999 சதுர அடி தரைத்தளம், 1269 சதுர அடி முதல் தளம் மற்றும் 1190 சதுர அடி இரண்டாவது தளம் கொண்ட கட்டிடம். எல்லைகள்: கிழக்கு: P.T.தாமஸ்-க்கு சொந்தமான நிலம், மேற்கு: மதர் அண்ட் சைல்டு கேர் சென்டர், வடக்கு: நகராட்சி கழிவறை, தெற்கு: Mr.ஜோதி பீட்டர்-க்கு சொந்தமான சொத்து.

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 1,60,00,000/- டேவணித்தொகை ₹ 16,00,000/- ஏல உயர்வுத்தொகை ₹ 1,00,000/-

இ-ஏல தேதி & நேரம் 22.05.2026 நேரம்: காலை 10.30 முதல் 11.30 வரை (விற்பனை முடியும் வரை ஒவ்வொரு 5 நிமிட காலவரையற்ற நீட்டிப்புகளுடன்)

டேவணித் தொகையினை 21.05.2026 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ மாலை 5.00 மணிக்குள் செலுத்த வேண்டும்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் முன் அனுமதி பெற்று சொத்தினை பார்வையிட தேதி மற்றும் நேரம்: 20.05.2026 காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

குறைந்தபட்ச கேட்பு விலையில் 10% டேவணித் தொகையினை M/s PSB Alliance Private Limited (Baanknet) இன் இணையதளத்தில் நேரடியாகவோ அல்லது Challan எடுத்து Challan இல் குறிப்பிட்டுள்ள கணக்கில் RTGS/NEFT மூலமாகவோ செலுத்த வேண்டும்.

வங்கியின் அடையாளபூர்வ சுவாதீனத்தில் உள்ள சொத்துகளுக்கு, ஏலத்தில் வாங்குபவர் கீழ்க்காணும் நிபந்தனைகளையும் விற்பனையின் வழக்கமான நிபந்தனைகளுடன் சேர்த்து கடைப்பிடிக்க வேண்டும்: **1.** ஏலத்தில் பங்கேற்கும் நபர், அடையாளபூர்வ சுவாதீனத்தில் உள்ள சொத்தை தனது சொந்த ஆபத்து மற்றும் பொறுப்பில் வாங்குகிறார். **2.** சொத்தின் நேரடியான சுவாதீனத்தை வழங்க வங்கி எந்த விதத்திலும் பொறுப்பாகாது அல்லது கட்டாயப்படுத்தப்படாது. **3.** ஏலத்தில் வெற்றி பெற்றவர், பணம் திருப்பி வழங்கப்படும் எந்த சூழலிலும் வட்டி கோர உரிமை பெற்றவராக இருக்கமாட்டார். **4.** ஏலத்திற்குப் பிறகு, வெற்றி பெற்ற ஏலதாரர் மேலே கூறிய நிபந்தனைகள் (1 முதல் 3 வரை) ஏற்றுக்கொண்டு, அதற்கான அறிக்கை மற்றும் உறுதிமொழியை உடனடியாக சமர்ப்பிக்க வேண்டும். **5.** விற்பனைக்கு பிந்தைய கட்டத்தில், வெற்றி பெற்ற ஏலதாரர் அறிக்கை மற்றும் உறுதிமொழி சமர்ப்பிக்கத் தவறினால், ஏலத்தின் முன்பணம் (EMD) பறிமுதல் செய்யப்படும்.

விற்பனையின் விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கனரா வங்கியின் இணைய தளத்தில் **(www.canarabank.com)** வழங்கப்பட்ட மின் ஏலம் என்ற இணைப்பை பார்க்கவும். அல்லது வங்கியின் சேவை வழங்குனர் **BAANKNET (M/s PSB Alliance Pvt. Ltd), (Contact No. 70466 12345 / 63549 10172 / 82912 20220 / 98922 19848 / 81602 05051, Email:support.baanknet@psballiance.com)** அல்லது கனரா வங்கி, சொத்து மீட்பு மேலாண்மை கிளை I, சென்னை-600 018 **(Ph.No. 044 - 2849 6339 / 2849 6900) E-mail: cb2361@canarabank.com** எந்தவொரு வேலை நாட்களிலும் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

Portal of E-Auction: https://baanknet.com

தேதி : 24.04.2026, இடம் : சென்னை **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கனரா வங்கி**

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, பெங்களூரு, திருவனந்தபுரம்

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 and Printed by Sri R.Barathan, Indian, Survey Nos. 38/2 to 40/2B, Madurai-Rameswaram Road, Puliankulam Village, Madurai South Taluk, Madurai-625201 on behalf of KSL MEDIA LIMITED., Chennai-600002. Editor: V. Venkateswaran (Responsible for selection of news under the PRP Act).

MA-MA